மலர் 1 இதழ் 4 ஏப்ரல், 2017 ISSN : 2454-3993

# இலக்கியங்கள் உணர்த்தும் மனிதநேயம்

**முனைவர் சி.கவிதா**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
கே. ஜி. கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர்

**முன்னுரை**

மனிதநேயத்தின் குணங்களாக அன்பு, கருணை, இரக்கம் என்ற வகையில் வகைப்படுத்தலாம். சக மனிதர்களிடமும் அன்பு காட்டுவதை மனிதநேயம் என்று கூறலாம். இதில் உயிரின்மீது இரக்கம் கொள்ளும் அன்பு என்பது முக்கியமானதாக மனிதநேயத்தில் அமைகின்றது. வள்ளுவர், "அன்பின் வழியது உயிர்நிலை" என்றும், "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளல்பெருமானின் வாக்கும் மனிதநேயத்தை முன் நிறுத்துகின்றன. அன்பை மனிதன் மனிதன்மீது காட்டுவது மட்டுமன்று, மனிதன் பிற உயிர்களின் மீதும் காட்டுவதான அன்பும் பரிவுமே மனிதநேயம் என்பதை உணர்த்துகிறார்கள். அன்பின் வழியில் மனிதநேயத்தைச் சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள் வரை எடுத்துரைக்கின்றன. மனிதன் காலத்திற்கேற்ற மாற்றங்களால் வாழ்வியல் அறங்களை மறந்து வாழும்நிலையில் இலக்கியங்கள் உணர்த்தும் மனிதநேயம் என்னும் இக்கட்டுரை தமிழ் இலக்கியங்களில் பதிந்துள்ள மனிதநேயத்தை வெளிப்படுத்துவதாய் அமைகிறது.

**சங்க இலக்கியத்தில் மனிதநேயம்**

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் உறுதிப்பொருளாகக் கொண்டு படைக்கப்படுபவையே இலக்கியங்கள். "அறம்" என்பதிலேயே மனிதம் இடம்பெற்றுள்ளது. இவ்விலக்கியங்களின் நோக்கமே மானுடநலம்தான். தமிழ் இலக்கியங்கள் தொன்றுதொட்டு, பல்வேறு வடிவங்களில் படைக்கப்பட்டாலும் இவற்றில் மனிதநேயமே மேலோங்கிக் காணப்படுகிறது. சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூறு, இரு அரசர்களும் பொருத முற்படும்போது, பகையரசனின் மக்களாக இருந்தாலும் அவர்கள்மீது கருணைகொண்ட பகையரசனின் மனிதத்தைப் பின்வருமாறு புலப்படுத்துகிறது.

"ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேறுமின்" (புறநானூறு, பா.9)

சோழன் நலங்கிள்ளிக்கும், நெடுங்கிள்ளிக்கும் ஏற்படவிருந்த போரைக் கோவூர் கிழார் என்னும் புலவர் மனிதநேய உணர்வின் அடிப்படையில் தடுத்தி நிறுத்து அறிவுறுத்தினார். அதன் விளைவால் அவர்களிருவருக்கும் நடைபெறவிருந்த போர் தவிர்க்கப்பட்டது. இதனை,

"இருவீர் வேறல் இயற்கையும் அன்றே அதனால்
குடிப்பொருள் அன்றுநும் செய்தி கொடித்தேர்
நும்மோர் அன்ன வேந்தர்க்கு மெய்ம்மலி
உவகை செய்யும் இவ்இகலே" (புறம்-45)

என்ற பாடல் வழி அறியலாம்.

பிற உயிர்படும் துன்பத்தைப் போக்க அத்துன்பத்தைத் தானும் ஏற்று, நடுவுநிலையோடு ஆட்சிபுரிந்த மனுநீதிச் சோழனின் மனிதநேயம் மகத்தான ஒன்றாகும். இது மனிதன் பிற உயிர்கள்மீது கொண்ட அன்பு வெளிப்பாடு, எல்லா உயிர்களும் தன்குடைக்கீழ் உள்ள மக்களே என்ற தாயுள்ளம்கொண்ட தன்மையேயாகும்.

"அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நீரயங் கொள்பவரொடு ஒன்றாது, காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி (புறம் 5 : 5-7)

அன்பு காட்ட வேண்டிய இடத்தில் அன்பும் அடித்துத் திருத்த வேண்டிய இடத்தில் அடித்துத் திருத்தியும் குழந்தையின் நலத்தைப் பேணி வளர்ப்பது போல, தன் நாட்டு மக்களைப் பேணிக்காத்து வரும் மன்னன் என்பவன் தாய் போன்றவன் என நரிவெரூஉத் தலையார் பாடலின் வழி அறிய முடிகின்றது.

**ஆற்றுப்படை**

**சிறுபாணாற்றுப்படை**

இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனாரால் 269 அடிகளில் யாக்கப்பட்ட சிறுபாணாற்றுப்படை, ஒய்மாநாட்டு நல்லியக்கோடனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. சிறுபாணனை நல்லியக்கோடனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்த நூல். பாணர்கள் பாடி முடித்ததும் பரிசு வழங்காமல், பாடும் முன்பே நல்குரவை நீக்கி, பாடுகின்ற பொழுதே பரிசு நல்குபவன். நல்லியக்கோடனின் நாட்டு வளத்தை மட்டும் கூறாது, மூவேந்தர்களின் நாட்டு வளத்தையும் கூறுகின்றபொழுது புலவரின் நடுநிலமை புலப்படுகிறது. இந்த நடுநிலைமையிலேதான் மனிதமும் வாழ்கிறது. நல்லியக்கோடனின் சிறப்பைக் கூறவந்த புலவர் அவன் சிறப்பை மட்டும் கூறாது, கடையேழு வள்ளல்களான பேகன், பாரி, காரி, ஆய்அண்டிரன், அதியமான், வல்வில்ஓரி, நள்ளி ஆகியோரின் கொடைத் தன்மையையும் ஒருங்கே கூறுகிறார்.

"கான மஞ்ஞைக்கு கலிங்கம் நல்கிய .......
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய"

(சிறுபாணாற்றுப்படை,85-89)

இக்கடையேழு வள்ளல்களின் கொடைத்தன்மைகள் அத்துனையும் ஒருங்கே பெற்றுத் திகழ்பவன் நல்லியக்கோடன் என்பதை,

"எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்"

(சிறுபாணாற்றுப்படை,113 ___115)

என்ற அடிகள் உறுதிப்படுத்துகின்றன.

.

**பெரும்பாணாற்றுப்படை**

வறுமையுற்ற பாணனும் சுற்றத்தாரும் இளந்திரையனிடம் பரிசு பெற்று வந்ததைப் பரிசு பெற விளையும் பாணனிடம் கூறுகிறான்.களவும் கொலையும் புரியும் கொடியோர்கள் இல்லாதது இளந்திரையனின் நாடு. மூவேந்தர்களிலும் சிறப்புடையவன் இளந்திரையன்.இயற்கைச் சீற்றங்களாலும் கொடிய விலங்குகளாலும் அவன் நாட்டிற்கு எத்தீங்கும் ஏற்படாது. உலக உயிர்களுக்கெல்லாம் உயிர் வாழ ஆதாரமாக இருப்பது உணவு. அந்த உணவை உற்பத்தி செய்யும் உழவர்கள் வாழ்கின்ற பகுதிகளில், வறுமை என்பதே இல்லை.

"தொல்பசி அறியாத் துளங்கா இருக்கை
மல்லல் பேரூர் மடியின் மடியா
வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி"

(பெரும்பாணாற்றுப்படை, 253 - 255)

என்ற பாடல் அடிகள் உழவர்கள் என்றும் வறுமையடையாதவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. பற்பல இடங்களைக் கடந்து சென்றால், பரிசில் பெறுபவர்களுக்கு என்றுமே அடையாத நெடுங்கதவம் இளந்திரையனிடம் இருக்கிறது. சுற்றத்தாருடன் சென்றால் அவர்கள் வறுமையையும் நீங்கப் பரிசில் வழங்குவான். அவன், பரிசில் பொருள்களோடு குதிரைகளையும் யானைகளையும் இன்னபிற பொருள்களையும் வழங்கும் வண்மையும் மனிதமும் உடையவன் இளந்திரையன்.

**பதிற்றுப்பத்து**

கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்னும் மன்னன் கொடுக்கும் பொருள்களை அவை அரியவை என்று எண்ணாமலும், தனக்கு வேண்டும் என்று எண்ணாமலும், பிறருக்காக வழங்குபவன். தான் அணிந்த ஆபரணங்களை இரவலருக்கு மிகக் கொடுத்ததல்லாமல் கனவில்கூட, "என்னுடைய துன்பத்தை நீக்குக" என்று பிறரிடம் கூறுதலை அறியாத குற்றமற்ற மனத்தை உடையவன் என்பதையும்,

"அரிய என்னாது ஓம்பாது வீசி,
களைக, என அறியாக் கசடு இல்நெஞ்சத்து" (பதிற்.44 : 4-6)

என்ற பாடலடிகள் உணர்த்துவதன் வழி அறியமுடிகின்றது.

**நீதி இலக்கியம் உணர்த்தும் மனிதநேயம்**

அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த திருக்குறள் எனும் பெருமை பெற்றது திருக்குறள். உலகிற்கு அறநெறி அறிவிக்கும் திருக்குறள் உலகமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறப்பினைப் பெற்றது. அழியாப் பெருமை பெற்ற திருக்குறள். அறியாமை நீக்கி பகுத்தறிவைத்தரும் சிறப்பினைப்பெற்றது. எண்ணிலடங்கா கருத்துக்களைக் கொண்டதிருக்குறள் மனிதநேயச் சிறப்பை எடுத்துரைக்கின்றது.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" (குறள்:79)

என்ற குறட்பாவில் அன்பு என்பது கடுகளவும் இல்லாதவர் தம்பொருள் எல்லாவற்றையும் தாமே பயன்படுத்துவர். ஆனால் அன்புடையோர் தம்மிடம் இருப்பதை பிறருக்கும் கொடுத்து பிறருக்காக வாழ்வர் என்பதை வள்ளுவர் கூறுகின்றார். மேலும்,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (குறள்.322)

என்று குறிப்பிடுகின்றார். அறிவிற் சிறந்தோர் தொகுத்தவற்றுள் தலைசிறந்தது தம்மிடமிருப்பதைப் பகுத்துண்டு வாழ்வதே என்று கூறுகின்றார்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று." (குறள்.108)

ஒருவர் உனக்கு செய்த நன்மையை ஒருபோதும் மறக்காதே. செய்த தீமையை உடனே மறந்து விடு என மனிதநேயம் கற்பிப்பது திருக்குறள். உயர்ந்த வாழ்வியல் நெறிகளைக் கற்ப்பிப்பது திருக்குறள் ஒன்றே.

"வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்

உள்ளத்து அனையது உயர்வு" (குறள்.595)

நீரின் உயரத்திற்கு ஏற்ப மலரின் காம்பு உயரும். அதுபோல மக்களின் எண்ணத்திற்கு ஏற்ப வாழ்க்கை உயரும் எனும் உயர்ந்த கருத்தினைத் திருவள்ளுவர் கூறுகிறார்.

நான்மணிக்கடிகை இல்லார்க்கு கொடுத்தலும் ஏழை உறவினரை எடுத்துயர்த்தலும் சிறந்ததெனக் கூறுகின்றது. இதனை

"கொடுப்பின் அசனம் கொடுக்க

.................வெகுளி கெடுத்துவிடல்" (நான்மணிக்கடிகை-79)

என்ற பாடல் குறிப்பிடுகின்றது.

சிறுபஞ்சமூலம் கண்ணுக்கு அழகு துன்பப்படும் மக்களிடம் இரக்கங்காட்டுவது என மனிதநேயத்தை எடுத்துரைக்கின்றது.

**பக்தி இலக்கியம் உணர்த்தும் மனிதநேயம்**

அன்பு எனும் இனிய மகத்துவத்தை உலக உயிர்களுக்கு இறைவன் அளித்துள்ளான். மேன்மையான அன்பு வெளிப்பாட்டை பிறரிடத்தும், பிற உயிர்களிடத்தும் காட்ட வேண்டுமென்பது பழந்தமிழ் இலக்கியங்கள் நமக்கு உணர்த்தும் செய்தியாகும். இதனையே வள்ளலார் 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் " எனக் கூறினார். மேலும்,

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே

அன்பெனும் குடில் புகும் அரசே

அன்பெனும் வலைக்குட் படும் பரம்பொருளே..."

என அன்பின் மேன்மையை உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

அன்பு செலுத்துவதோடு மட்டுமன்றி பிறருக்குச் சேவை செய்வதே உயர்ந்ததாகும். சேவை மனம் படைத்தவர்கள் பிறருக்குத் தொண்டு செய்வதைப் பாரமாக நினைப்பதில்லை. சைவ சமயத்தில் இறையடியார்களுக்குச் செய்யும் திருத்தொண்டு இறைவனுக்கே செய்யும் தொண்டு என்பர். இதன் சிறப்பைப் பெரியபுராணம் காட்டும். அதனாலேயே இந்நூலுக்கு "திருத்தொண்ட மாக்கதை" என்ற பெயருண்டு. சைவசமயம் வளர்த்து இறையருள் பெற்ற காரைக்கால்அம்மையா வந்தோர்க்கு உணவளித்தலே இறைவனுக்குச் செய்யும் தொண்டு எனப் பாடலில் குறிப்பிடுகிறார்.

"நம்பர் அடியார்க்கு அணைந்தால் நல்லதிரு அமுது அளித்து"

(காரைக்கால் அம்மையார் புராணம் பா. 5 )

வைணவம் வளர்த்த ஆண்டாள் தம் திருப்பாவையில் உலக உயிர்களுக்கென மழைவேண்டும் என கண்ணனைப் பாடிப்பணிகின்றார். பக்தி இலக்கியங்கள் தொண்டு செய்தலே மனிதநேயம் என எடுத்துரைக்கின்றன.

ஒப்பிலாக்கவிஞர்களான பாரதியும் பாரதிதாசனும் தம் கவிதைகள் வழி மனிதநேயத்தை ஆழமாகப் பதிவுசெய்துள்ளனர்.

"தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில்
இந்த ஜகத்தினை அழித்திடுவோம்"

என்ற பாரதியின் கூற்றும் இங்கு நினைவுகூறத்தக்கதாகும். மற்றவர்களுடைய பசியைப் போக்குதலே செல்வம் பெற்றதன் பயனாக இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

**முடிவுரை**

இன்றைய சூழ்நிலையில் மனிதன் மனிதநேயத்தை இழந்து சுயநலத்தோடு வாழ்கிறான். வாழ்க்கைக்குத் தேவையான அன்பு,பாசம் போன்ற உணர்வுகள் மறக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் வருகின்றன. ஆறறிவு படைத்த மனிதன் அன்பை மறந்து, உறவுகளை மறந்து தன் நலம் பேணத்துவங்கிவிட்டான். தன் நலன் மட்டுமே பேணப்படும் மனத்தில் மனிதநேயத்தைக் காண முடியாது. பிறர் நலன் காக்க வேண்டும். பிறருக்கு உதவி புரிய வேண்டும் என்ற எண்ணம் வந்தாலே மனிதநேயம் உயரும். தமிழ் இலக்கியங்கள் மனிதநேயத்தை விதைக்கும் விழுமியங்கள் என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது.

**பார்வை நூல்கள்**


- சங்க இலக்கியம், கழகவெளியீடு.
- திருக்குறள் பரிமேலழகர் உரை
- க.கோ வேங்கடராமன், இலக்கியவரலாறு.
- மயிலை சீனிவேங்கடசாமி, சைவமும் தமிழும் .
- கோ. நிர்மலாதேவி, காரைக்கால் அம்மையார்புராணம்.
- திருமந்திரம், கழகவெளியீடு.